00025

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2020/2021

இறுதிப் பரீட்சை

**EPD3530 / ESD1230 –** பிள்ளைவிருத்தி

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 25.06.2023 நேரம்: பி.ப. 09.30 - பி.ப 12.30

- பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக.

பகுதி - I

1. முன்பள்ளி ஆசிரியர் ஒருவர் பிள்ளைவிருத்தி பற்றி கற்பதற்கான முக்கியத்துவம் **ஐந்தினை** (05) முன்வைக்குக.
2. ரூசோ சுட்டிக்காட்டும் தனியாள் விருத்தி நிலைகள் **ஐந்தினை** (05) பெயரிடுக.
3. "அண்மை விருத்தி வலயம்" எனும் பதத்தால் குறிப்பிடுவது யாது? உமது சொந்த மொழி நடையில் விளக்குக.
4. "முதிர்ச்சிக்கும், கற்றலுக்கும்" இடையிலான தொடர்பை சுருக்கமாக விபரிக்குக.
5. ஞாபகத்தின் வகைகளை பெயரிடுக. மற்றும் ஞாபகத்தினை மேம்படுத்துவதற்கான காரணிகள் **இரண்டினை** (02) சுருக்கமாக விளக்குக.
6. பொருத்தமான வரைவிலக்கணத்தை பயன்படுத்தி "கவனம்" எனும் பதத்தை விளக்குக.
7. "சுயமதிப்பு" (Self Esteem) மற்றும் "சுய எண்ணக்கருக்களை" வெவ்வேறாக விளக்குக.
8. பிள்ளைகளின் மொழி விருத்தி பற்றி நீர் அறிந்த தத்துவார்த்த விளக்கங்கள் **மூன்றினை** (03) முன்வைக்குக.

**(5 X 8= 40** புள்ளிகள்)

பகுதி - II

9.

**i.** ஆரம்பக்கல்விப்பிரிவில் பிள்ளைகளின் மொழிவிருத்தியில் ஆசிரியரின் வகிப்பங்கினை விளக்குக.
(10 புள்ளிகள்)

**ii.** தரம் 1 இல் உள்ள பிள்ளைகளின் கேட்டல் மற்றும் பேச்சுத்திறனை விருத்தி செய்வதற்குரிய பொருத்தமான **இரண்டு** (02) செயற்பாடுகளை வெவ்வேறாக விபரிக்குக.
(10 புள்ளிகள்)

10.

**i.** பியாஜேயின் கோட்பாட்டின் அடிப்படையில் 2-7 வயதுடைய பிள்ளையின் சிந்தனைத் தன்மையை விளக்குக.

(10 புள்ளிகள்)

**ii.** ஆரம்பக்கல்வி ஆசிரியர் என்ற வகையில் சிந்தனைத் தன்மைக்கு ஏற்ப கவனத்தில் கொள்ள வேண்டிய **மூன்று** (03) காரணிகளை விளக்குக.

(10 ள்ளிகள்)

11.

**i.** ஆரம்பக்கட்டத்தில் பிள்ளைகளிடம் இனங்காணக்கூடிய **ஐந்து** (05) கவனச்சிக்கல்களை (Attention Difficulties) எழுதுக.

(05 புள்ளிகள்)

**ii.** மேற்குறிப்பிட்ட கவனச்சிக்கல்கள் **இரண்டினை** (02) விளக்குக.

(05 புள்ளிகள்)

**iii.** ஆசிரியர் என்ற வகையில் கவனத்திறனை விருத்தி செய்வதற்கு மேற்கோள்ளக்கூடிய **இரண்டு** (02) செயற்பாடுகளை விபரிக்குக.

(10 புள்ளிகள்)

12.

**i.** ஹோவார்ட் கார்டினரினால் முன்வைக்கப்பட்ட பன்முக நுண்ணறிவுக் கொள்கையின் முக்கிய அம்சங்களை குறிப்பிட்டு விளக்குக.

(10 புள்ளிகள்)

**ii.** ஹோவார்ட் கார்டினரின் கோட்பாட்டை முன்பள்ளி வகுப்பறையில் வினைத்திறனுள்ள ஆசிரியர் என்ற வகையில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை விளக்குக.

(10 புள்ளிகள்)

13.

**i.** வெவ்வேறுபட்ட விருத்தி பிரிவுகள் ஊடாக முழுவிருத்தியை (Total Development) விபரிக்குக.

(10 புள்ளிகள்)

**ii.** ஆசிரியர் என்ற வகையில் பிள்ளைகளின் மனவெழுச்சி விருத்திக்கு சிறுவர் கதைகளை எவ்வாறு பயன்படுத்துவீர்கள் என்பதை விளக்குக.

(10 புள்ளிகள்)

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -